ஸ்ரீ.

கோயின்மாலை



என்னும்

# திருவரங்கத்துமாலை

மூலபாடம்.

## அழகியமணவாளதாசர்

என்கிற திவ்வியகவி

## பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

அருளிச்செய்தது.



இஃது

சென்னபட்டணம்:

வ. புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1890.

ஸ்ரீராமஜயம்.

# திருவரங்கத்துமாலை.

## தனியன்.

மறைப்பொருளோவச்சிரப்பொருளோமனுவேமுதலாம்
முறைப்பொருளோவிதிகாசபுராணமுதுப்பொருளோ
இறைப்பொருளாகம்பெருமாளுடைத்திருவெட்டெழுத்துள்
ளுறைப்பொருளோமணவாளர்தம்மாலையினுட்பொருளே.

## காப்பு.

நாளும்பெரியபெருமாளரங்கர்நகைமுகமும்
தோளுந்தொடர்ந்தென்னையாளும்விழியுந்துழாய்மணக்கும்
தாளுங்கரமுங்கரத்திற்சங்காழியுந்தண்டும்வில்லும்
வாளுந்துணைவருமேதமியேனைவளைந்துகொண்டே.

---

## நூல்.

திருவாழிசங்குதிருவாழிவாழிசிறந்தகொண்டல்
உருவாழியோகத்திருத்துயில்வாழியுலகளந்த
மருவார்மதுமலர்த்தாள்வாழிவாழிவணங்குமன்பர்
பெருவாழ்வனையபெருமாளரங்கப்பெருஞ்செல்வமே. (க)

படுப்பவனைப்பணிமெல்லணையாகப்பருவனையால்
தடுப்பவனைப்பண்டுமண்டுகன்மாரிதரணியிடந்
தெடுப்பவனைத்தம்மடியாரிடம்பச்சிலைக்குமுத்தி [னே.
கொடுப்பவனைச்செம்பொற்கோயிலுள்ளேகண்டுகொண்டன

ஆளானவர்கண்களிகூரரங்கத்தரவணைமேல்
நாளாசலமெனக்கண்டுகொண்டேன்மறைகாணவொண்ணாத்
தாளாயிரஞ்செம்பொன்மாமுடியாயிரந்தாமநெடுந்
தோளாயிரந்திருக்கண்ணாயிரங்கொண்டசோதியையே. (௩)

பூங்காவிரிப்புனற்கோயிலுள்ளேமிக்கபோகமெல்லாம்
யாங்காணயோகத்துயில்கொண்டவாறெள்ளுமெண்ணையும்
நீங்காதுலகத்துயிர்க்குயிராகியாமகனாய் [போல்
ஓங்காரமாயதனுட்பொருளாய்நின்றவொண்சுடரே. (௪)

கறங்காழிநாலெட்டிலக்கமியோசனைகட்செவியின்
பிறங்காகமும்மையிலக்கமியோசனைபேருலகில்
இறங்காழிமேகமெனவேயரங்கத்திலெந்தையதில்
உறங்காகநீளமைந்தைம்பதினாயிரமோசனையே. (௫)

பாற்கடனாலெட்டிலக்கமியோசனைபாற்கடலுள்
மாற்கவிகோயிலகலமுநீளைந்துவானளவும்
நீற்கமொரேழுதிகழ்பணிமூன்றுசிறந்தகலம்
ஏற்கவினென்றனையுந்தமர்நீளமிரண்டனையே. (௬)

அடித்தலமர்தவதலம்பொருதிரையாழிவையம்
கடித்தலநேமிக்கிரியுடையாடைகபாலிமுன்னாள்
மிடித்தலமர்ந்தொழித்தானரங்கன்விழியிருகோள்
முடித்தலமண்டமுகடினியாமென்மொழிவதுவே. (௭)

திண்சுடராழியரங்கேசர்திக்குத்திருச்செவியில்
மண்கமழவிற்சத்தியலோகஞ்சிரத்தின்மருத்துயிரில்
தண்கதிருள்ளத்தில்வானுந்தியிற்செர்தரணிகண்ணில்
ஒண்கனலிந்திரன்வாழ்முகப்போதினுதித்தனரே. (௮)

புரமாயிரந்திருக்கண்மலராயிரம்புண்டரிகக்
கரமாயிரங்கழற்கான்மலராயிரங்கண்ணிமுடிச்
சிரமாயிரந்திருநாமமுமாயிரஞ்செய்யகையில்
அரமாயிரங்கொண்டதிண்டிறலாழியரங்கருக்கே. (௯)

முன்னாள்விசும்பும்புவியுந்திசையுமுறைவகுத்த
அந்நான்முகன்றனதாவியெல்லாமலராசனையாம்
மின்னார்மழைமுகினன்னாகமீதில்விழிதுயில்கூர்
என்னாதனக்கொருமூச்சென்றுவேதமிசைக்கின்றதே. (௧0)

எண்ணிற்றிகிரிப்பிறப்பிடமானதுமெண்ணுமவர்
நண்ணிச்சிறக்கவிருப்பிடமானதுநாசமில்லா
விண்ணிற்பதிக்குக்கடைத்தலையானதும்விண்ணவர்தங்
கண்ணிற்சிறந்ததுமாநீரரங்கர்தங்கண்ணிலொன்றே. (௧௧)

புறக்குன்றுபுல்லிதழ்முந்நீர்பிரசம்பொருவில்செம்பொன்
நிறக்குன்றுகன்னிகையெண்கிரிதாதுநிலமதனுள்
பிறக்குந்துகண்முதுமாசுணநாளம்பிரமன்வண்டு
சிறக்குந்திகிரியரங்கேசருந்திச்செழுமலர்க்கே. (௧௨)

இருகூலமும்பொருமாநீரரங்கத்திலெந்தையந்தன்
முருகூர்கமலமுனியாய்வகுக்குமுறைமையினால்
புருகூதனுக்குத்திருத்தம்பியாகிப்புரக்குமுமை
ஒருகூறுகொண்டவனாயழிக்குமுகாந்தத்திலே. (௧௩)

வாரித்தலமுங்குலபூதரங்களும்வானுமுள்ளே
பாரித்துவைத்தவிவ்வண்டங்கள்யாவும்படைக்கமுன்னாள்
வேரிப்பசுந்தண்டுழாயரங்கேசர்விபூதியிலே
மூரிப்புனலிற்குமிழிகள்போலமுளைத்தனவே. (௧௪)

நெடுங்கடனிற்பதுநாயிறுகாய்வதுநிற்றலுங்கால்
ஒடுங்கிநடப்பதுந்தண்கார்பொழிவதுமூழிதனில்
சுடுங்கனல்பற்றிச்சுடாதேயிருப்பதுந்தும்பைபுனைந்
நடுங்கனலாழியரங்கேசர்தந்திருவாணையினே. (௧௫)

ஓலப்புனற்பொன்னிநன்னீரரங்கருகந்திரியும்
காலத்தினிற்கொள்ளையண்டமெல்லாமுண்டுகோமர்பசுங்
கோலக்குழவியுருவாயகண்டமுங்கோத்தவெள்ளத்
தாலத்திலையின்புடைக்கேதுயில்வரகமகிழ்ந்தே. (௧௬)

நாற்றுக்கமுகவனஞ்சூழரங்கர்சயனமுகக்
காற்றுப்புலரும்படிமுதல்வீசுங்கறைக்களத்தன்
நீற்றுச்சிவக்தெழுங்காராழித்தீச்சுடுநீள்கழலின்
ஆற்றுப்பெரும்பெருக்கண்டமெல்லாங்கொள்ளுமந்தத்திலே.()

சின்னூல்பலபலவாயாலிழைத்துச்சிலம்பிபின்னும்
அந்நூலருந்திவிடுவதுபோலவரங்கரண்டம்
பன்னூறுகோடிபடைத்தவையாவும்பழம்படியே
மன்னூழிதன்னில்விழுங்குவர்போதமனமகிழ்ந்தே. (கஅ)

பந்திக்கமலத்தடஞ்சூழரங்கர்படைப்பழிப்பு
சிந்தித்திடுவதுமில்லைகண்டீரத்திசைமுகனோ
டுந்திக்கமலம்விரிந்தால்விரியுமுகக்கடையில்
முந்திக்குவியிலுடனேகுவியுமிம்மூதண்டமே. (கக)

அடர்ந்தைநடந்தைவனஞ்சூழரங்கத்தரவணைமேல்
கிடந்தனர்துங்கக்கிரிமிசைநின்றனர்கேழலொன்றாய்
இடந்தனர்மீளவிழுங்கினர்கான்றனரீரடியால்
கடந்தனர்கைவழிமன்னுனதித்தமன்காரணர்க்கே. (உ0)

பின்னைக்கினியபெருமாளரங்கர்பெறுதுபெற்ற
முன்னைப்பிரமனைவாழ்விக்கவேண்டிமுன்னுள்கவர்ந்த
அன்னத்திருவுருவுள்ளேவளர்ந்ததற்கோரண்டமாம்
என்னச்சிறந்ததுமூதண்டம்யாமெனியம்புவதே. (உக)

சூழிக்களிறுய்யவெவ்வாய்முதலைதுணித்தவுக்கிர
பாழித்திகிரிப்படையரங்கேசர்படைப்பவன்றன்
ஊழிப்பொழுதொருசேலாயொருசெலுவுட்காந்த
ஆழிப்பெரும்புனல்காணுதுதேடுவரவ்விடத்தே. (உஉ)

பாட்டுக்குமுத்தமிழ்வில்லிபுத்தூர்வரும்பாவைகுழற்
சூட்டுக்குநல்லவர்தென்னரங்கேசர்தொடுகடல்வாய்
மோட்டுக்கமடத்திருவுருவாகிமுதுமுதுகில்
கோட்டுச்சயிலமுழுவதென்னுத்துயில்கொண்டனரோ. (உங)

திரிக்கின்றபொற்குன்றமுந்தாமலாமைத்திருவுருவாய்ப்
பரிக்கின்றதிற்பெரும்பாரமுண்டேபண்டோன்மறைநூல்
விரிக்கின்றவுந்தியரங்கேசர்தந்திருமேனியின்மேல்
தரிக்கின்றதுமகரக்கடலாடைத்தராதலமே. (உச)

ஒருருவெற்பைத்தரித்ததுதானவரும்பருள்ளாய்
ஈருருநின்றுகடைந்ததுவேலையிதனிடையோர்
பேருருவின்னமுதோடேபிறந்ததுபெண்மைகொண்டோர்
ஓருருநின்றதரங்காவிதுவென்னகற்றவமே. (உரு)

ஆருக்கிவரையளவிடலாந்தென்னரங்கரிந்தப்
பாருக்கரந்தைதவிர்ப்பதற்காகப்பழிப்பில்பெருஞ்
சீருற்றசெங்கட்கரும்பன்றியாகித்திருக்குளம்பில்
மேருக்கணகணமாத்தலைநாளில்விநோதிப்பரே. (உசு)

மருமலர்க்கோயின்மடமான்விரும்புமதிலரங்கர்
பெருமையைப்பேசுவதெப்படிநாம்பிறைவாளெயிற்றுக்
கருமுகிற்கோலப்பெரும்பன்றியாயகளேபரத்தின்
ஒருமயிர்க்காலடியூடேகடல்புக்கொளித்தனவே. (உஎ)

நிறக்குஞ்செழுஞ்சுடர்க்கோடுமிப்பாருநிசாமுகத்துச்
சிறக்கும்பிறையுங்களங்கமும்போலுமெனிற்சிறுகண்
மறக்குஞ்சரஞ்செற்றமாயோனரங்கன்வராகமதாய்ப்
பிறக்கும்பிறப்பின்பெருமையெவ்வாறினிப்பேசுவதே. (உஅ)

ஆடுமரவிற்றுயிலரங்கேசனருமகற்கா
நீடுந்தறியிலுதித்திலனேனிலைப்பொருள்கள்
ஊடும்புறத்தினுமுண்மையெவ்வாறிவ்வுலகறியும்
ஈடுமெடுப்புமில்லாவொருதெய்வமிவனெனவே. (உகூ)

மறந்தமறையுமமூங்கியமந்திரமும்மகமும்
இறந்ததெய்வங்களுமெல்லாமுனெங்குறைந்தெங்கியன்ற
அறந்தருங்கோயிலரங்கனவ்வாளரிக்காளரியாய்ப்
பிறந்தபினன்றேபிறந்துபெருகிப்பிறங்கியதே. (௩0)

அடிகண்டிலராதலத்தவனாம்முகனோடமரர்
கடிகண்டிலர்மலைவாணிவர்துங்கமலத்தயனார்
முடிகண்டிலரண்டமாமுகடேறியுமூதுணர்ந்தோர்
படிகண்டிலரரங்கேசர்கொள்சிங்கப்படிதனக்கே. (௩௧)

அறியினரங்கர்முன்னாளரியாயெவப்பொழுது
கொறியினவுணர்தம்வெள்ளங்கள்கோடியுங்கொன்றதிலோ
தறியின்வயிறிற்றருவனெஞ்சுஞ்சரபத்துடலும்
நெறியின்வகிர்ந்தபினன்றோதணிந்தநீள்சினமே. (௩௨)

தாரேற்றவெண்குடைமாவலிவார்க்கவுந்தாமரைமேல்
ஏரேற்றதொன்னான்முகத்தோன்விளக்கவுஞ்செம்பொன்முடிக்
காரேற்றமேனியரங்கேசர்கையுங்கழலுமொக்க
நீரேற்றனவண்டிருக்குறளாகிநிமிர்ந்தவன்றே. (௩௩)

தேமிக்கபச்சைத்துழாயரங்கேசர்திருக்குறளாய்த்
தாமிப்புவனங்கடந்தவந்நாண்மணற்சாகரஞ்சூழ்
பூமிப்புடையளவிட்டபொற்றாமரைப்பூங்கழற்கு
நேமிச்சிலம்புதிருச்சிலம்பாகிசிலைபெற்றதே (௩௪)

பூமருபொங்கர்புடைசூழரங்கர்பொலன்கழலால்
பாமருமூவுலகுங்கொண்டபோதுப்பிழிப்பில்பெருங்
காமருமோலிச்சிகாமணியாகிக்கவுத்துவமாய்த்
தேமருநாபியர்தாமரையானதுசெஞ்சுடரோ. (௩௫)

ஓதப்புனற்பொன்னிநன்னீரரங்கருலகளந்த
பாதத்துநீர்விண்படிபிலமூன்றிலும்பால்புரைவெண்
சேதத்தரங்கமர்தாகினியாகிச்செழுங்கங்கையாய்
மேதக்கபோகவதியாகிநாளும்விழுகின்றதே. (௩௬)

ஓலப்புனலரங்கேசர்பொற்றாள்பட்டுடைந்தவண்ட
மேலக்கடாகத்தொளைவழியாகவிழும்புனல்போய்க்
கோலத்திருவுருக்கொண்டவந்நாள்குரம்பட்டுடைந்த
மூலக்கடாகத்தொளையால்விழுந்ததுமுற்புனற்கே. (௩௭)

மறிக்குங்கயற்கண்ணிபங்காளன்வாழ்வெள்ளிமால்வரையைப்
பறிக்குங்கபடன்பணைப்புயமோவவன்பைங்கடகம்
செறிக்கும்புயஞ்செற்றவாயிரந்திண்புயமோவவற்றைத்
தறிக்குந்திறமழுவோவரங்காசயத்தாருடைத்தே. (௩அ)
மாதண்டமேவுங்கரத்தாரரங்கர்வடமிதிலைக்
கோதண்டவேகம்பிறப்பித்தபோதுகுவட்டுவெள்ளி
வேதண்டமேயமழுவாளிநாணினன்வென்றிகண்டு
மூதண்டமஞ்சுமழுவாளிகோபமுதிர்ந்ததுவே. (௩கூ)
மாகம்பிலந்திக்கிமையோருலகமழுவுடையோன்
நாகநன்னாடளவாகப்பன்னாகநடுங்கவம்பு
வேகங்கொடுதொடரப்பறந்தோடியுமீண்டுவந்து
காகஞ்சரணென்னநம்பெருமாளுயிர்காத்தனரே. (௪0)
மாதவரும்பர்பெருமாளரங்கர்வலியுணரா
தாதவன்மைந்தனயிர்த்தவங்காளிலக்காயநெடும்
பாதவமேழும்முட்னேநெடுங்கணைபட்டுருவப்
பூதலமேழுமெழுபாதலங்களும்புண்பட்டவே. (௪க)
ஒற்றைச்சரஞ்சுட்டவுட்கடல்போற்புறத்தோலமிட
மற்றைக்கடல்வெந்ததெவ்வன்னமோமதமார்வழைக்க
அற்றைக்குதவுமரங்கர்வெங்கோபத்தையஞ்சியரன்
கற்றைச்சடையினிடையேவெதும்பினள்கங்கையுமே. (௪உ)
கொங்குண்டுவண்டமர்தண்டாரரங்கர்வெங்கோபமுடன்
பொங்குஞ்சரஞ்செய்தமாயமென்னேதன்புகழடைய
மங்கும்படிக்குமறஞ்செயிராவணன்வாகினிகண்
டெங்குங்குரங்கெங்குமிராமனென்றேங்கியிருந்திடவே. (௪௩)
பேரொத்தவாயிரம்பேர்மடிந்தாற்பிறக்குங்கவந்தம்
நேரொத்தவாடுமதாயிரமாடினெடுஞ்சிலையில்
ஏரொத்தகிண்கிணிசற்றேயொலிடுமெதொர்யாமநின்று
காரொத்தமேனியரங்கர்தம்போரிற்கறங்கியதே. (௪௪)

சற்பத்துறங்குமரங்காவுன்பாதந்தனையடைந்த
நற்பத்தருக்கொருநாசமுண்டோநலமாமருத்தின்
வெற்பைக்கொணர்ந்தவிறலனுமானுமவ்வீடணனும்
கற்பத்தளவுமழியாதிருக்கவுங்கற்பித்தையே. (௪௫)

ஆவும்பயமுமமுதமொப்பானவரங்கருக்கு
மேவும்புகழின்னுமேவுங்கொலோவவர்மெய்யருளால்
தாவுந்தரங்கத்தடஞ்சூழயோத்திச்சராசரங்கள்
ஆவுங்கிளையுடன்வைகுந்தலோகத்திலார்ந்திடவே. (௪௬)

ஒருதாயிருந்தவருந்தவைதேகியுடன்சுரத்தில்
ஒருதாய்சொலச்சென்றதென்னரங்காவையமுய்யும்வண்ணம்
ஒருதாயுதரத்திலோரறுதிங்களுறைந்தபின்னை
ஒருதாய்வயிற்றில்வந்துற்றதெம்மாயமுனாத்தருளே. (௪௭)

கதிபட்டபொன்னியரங்கேசராடுகருந்திரைநீர்
நதிபட்டபாடுநேவின்றிடலாகுநலங்கெழுகூர்
ரதிபட்டநெட்டலத்தாலேயிழுத்திடநூற்றுவர்தம்
பதிபட்டகண்கலக்கந்தெரியாதுபகருதற்கே. (௪௮)

பண்டுவிழுங்கியபாருந்திசையும்பனிக்கடலும்
சண்டநெடுங்கிரித்தானமெல்லாஞ்சண்பகாடவிமேல்
மண்டுபெரும்புனல்சூழரங்கேசர்தம்வாய்மலருள்
கண்டுமருவினள்சீர்நந்தகோபர்தங்காதலியே. (௪௯)

உன்னைக்களவினுரலோடுகட்டிவைத்துன்னுடைய
அன்னைக்கொருத்தியறிவித்தபோதலையாழிமங்கை
தன்னைப்புணர்ந்தருடாரரங்காவவடன்மருங்கில்
பின்னைக்கொடுசென்றபிள்ளைமற்றொன்றுபேசுகவே. (௫௦)

கடிக்குங்கரளப்பிறைவாளெயிற்றுவெங்காளியன்மேல்
நடிக்கும்பெரியபெருமாளரங்கர்நறைகமழ்பால்
குடிக்குங்களவுக்குமாறுகொண்டேயொருகோபிபற்றி
அடிக்கும்பொழுதிற்பதினாலுலகுமடிபட்டவே. (௫௧)

ஆரந்தரும்பொன்னிசூழரங்காவுன்றனாய்ச்சிவெகு
தூரநெடுங்கயிறெல்லாமிசைசொத்துவைத்துமவை
ஈரமருங்கிற்குறைந்திடக்கண்பிசைந்தேங்குமவள்
வேரம்புயமுகங்கண்டளவானவிநோதமென்னே. (௫௨)

சிந்திக்கநெஞ்சில்லைநாவில்லைநாமங்கள்செப்பவின்னை
வந்திக்கமெய்யில்லைவந்திருபோதுமொய்மாமலர்ப்பூம்
பந்தித்தடம்புடைசூழரங்காததிபாண்டனுன்னைச்
சந்தித்தநாண்முத்திபெற்றதென்னோதயிர்த்தாழியுமே. (௫௩)

குன்றாவினைவுடன்வன்மைபருவங்குணங்களிவை
பொன்றாதிருந்தகன்மாயமென்னோபொன்னிசூழரங்கா
அன்றாயர்தங்குலமைந்தர்களாயுமலகிலிளங்
கன்றாயுநாடொறுஞ்சென்றுவந்தாடியகாலத்திலே. (௫௪)

நெடுங்கானிலத்துடன்கோவலர்தாமிகநின்றுநெஞ்சம்
நடுங்காதிமைத்திடுங்கண்களெல்லாமென்றுநண்ணலர்மேல்
விடுங்காலநேமியங்கையரங்காகண்விழிக்குமுன்னே
சுடுங்கானநல்லனமுற்றவம்மாயமென்சொல்லுகவே. (௫௫)

வானாடரிற்சிலர்சென்றுகண்டாரில்லைமற்றதனில்
போனாரின்மீளப்புவியில்வந்தாரில்லைபூவின்மங்கை
ஆனாதசெல்வத்திருவரங்காகொச்சையாயவெல்லாம்
மேனாட்பரமபதத்தினிற்போயெங்ஙன்மீண்டதுவே. (௫௬)

கூனத்துலாவயற்கோயிலுள்ளேபள்ளிகொள்ளுமெங்கள்
ஆனந்தவாரிதிருக்குழலூதவறத்தடிந்த
கானந்தழைத்தனகால்வரைநெக்கனகார்முகிறோய்
வானமயர்த்தனவையமெல்லாமெய்மறந்தனவே. (௫௭)

ஊருந்திரைப்பொன்னிநன்னீரரங்கவுருப்பலவாய்க்
காருந்தடித்துங்கலந்ததுபோலிடைக்கன்னியர்கள்
யாருங்களிக்கவிடையிடையேகலந்தின்பநலம்
கூருந்திருநடமாடியமாயமென்கூறுகவே. (௫௮)

மின்போலிடையிடைமாதரெல்லாமுன்றன்மெய்தழுவி
நன்போகசாகரத்துள்ளேமுழுகவுநாண்மலராள்
தன்போகமேமகிழ்தாரரங்காவண்டர்தாமவரை
அன்போடணைத்துத்துயின்றதெம்மாயமறிந்திலமே. (௫௯)

நீரிற்புகுங்கண்டுதேரினைப்பார்க்குநிறுத்தியபொற்
றேரிற்றொழும்பின்னைநீரினிற்காணுஞ்சிறந்தபச்சைக்
காரிற்றிறமெய்யரங்கனுஞ்சேடனுங்கஞ்சவஞ்சன்
னூரிற்செலவுடன்போமக்குரூரன்றனுண்மகிழ்ந்தே. (௬௦)

நாமமிகும்புகழ்யாதவர்வாழுங்கரிலும்பர்
தாமருவுஞ்சவைதத்தமவாயதனையவிழும்
தேமருபொங்கரரங்கேசருக்கிரசேனனுக்கு
மாமுடிவைக்கும்படிபடிமேற்கொடுவாவெனவே. (௬௧)

மதியாவெழுந்திரைமாநீர்மதுரையின்மன்னவனைக்
குதியாதவன்படைவந்தவந்நாள்செழுங்கோகனகப்
பொறியாடரவணைத்தென்னரங்காவொருபூதருமங்
கதியாவகைத்துவராபதிக்கேயெங்களுக்கினியே. (௬௨)

நறைத்துளவம்புனைநம்பெருமாள்விற்றிறஞ்சொல்வதோ
மறைப்பரிபூட்டியமாநிலத்தேரில்லைவாளெயிற்றின்
கறைப்பணிநாணுடைமேருவில்வில்லைகடும்பவனச்
சிறைத்தழலம்பில்லையொன்றோபுரஞ்செற்றதற்கே. (௬௩)

அருட்கொண்டலன்னவரங்கர்சங்கோசையிலண்டமெல்லாம்
வெருட்கொண்டிடர்படமோகித்துவீழ்ந்தனர்வேகமுடன்
தருக்கொண்டுபோகப்பொறாதேதொடருஞ்சதுர்முகனும்
செருக்கொண்டமுப்பத்துமுக்கோடிதேவருஞ்சேனையுமே. ()

நிணக்கோலநேமித்திருவரங்கேசநினக்கினிய
குணக்கோகனகையுங்கண்டனளோமணிக்குன்றில்வைகும்
கணக்கோதையர்பதினாறாயிரவரைக்கைப்பிடிக்க
மணக்கோலமும்பதினாறாயிரங்கொண்டுவாழ்ந்தவன்றே. (௬௫)

விடந்தோயரவிற்றுயிலரங்கேசவிசும்புமுட்ட
நடந்தோகைதன்னுடனாதன்காணநகைக்குமுந்த
வடந்தோய்வனமுலையெண்ணிரண்டாயிரமாதர்தங்கள்
இடந்தோறுநின்றெழில்வேறுயிருந்ததங்கெவ்வண்ணமே. ()

பாவிக்கொணுதபெருமாள்விநோதம்பகருமதோ
வாவிக்குணாதனாதியாயொருமன்னவன்றன்
ஆவிக்குலக்கொடியாய்நெடுங்காலத்தழிவிலின்பம்
மேவிக்குடும்பத்திடும்பையெல்லாமெய்திவிட்டனனே. (சுஎ)

தண்டுளவம்புனைதாரரங்காவைவர்தையலுக்கு
வண்டுகிலொன்றவைக்கண்ணுற்றபோதுதன்மன்னர்முன்னே
கண்டுளிசோரத்தொழுதுநின்பேர்கட்டுரைத்தபின்னை
ஒண்டுகில்கோடிகுவிந்ததெம்மாயமுரிந்துரிந்தே. (சுஅ)

இசையளவிட்டவரங்கேசனாவர்தம்மேவலிற்போய்
வசையளவிட்டமகிபன்முன்னேவளருந்திரடோள்
திசையளவிட்டனபாரளவிட்டனசேவடிவான்
மிசையளவிட்டனபொன்முடிமேலென்விளம்புவதே. (சுக)

மாயிருஞாயிறுப்பாரதப்போரின்மறையவங்கன்
பாயிருணீதந்ததென்னகன்மாயம்பவ்ளநெற்றிச்
சேயுயர்மாமதில்சூழரங்கேசதிரண்டுதித்த
ஆயிரங்கோடிதிவாகரன்போலொளிரார்ழிகொண்டே. (எ0)

நெட்டரவின்பெருமூச்செழவீசுநெருப்பில்வெர்து
பட்டகடம்புந்தழைத்ததுமீளப்பசுந்துளவின்
மட்டவிழ்தொங்கலரங்கர்பொற்றாள்படவாளிவெந்திச்
சுட்டகருங்கட்டையும்பெற்றதாருயிர்சொல்வதென்னே. (எக)

தாளாற்சகங்கொண்டதாரரங்காபண்டுசாந்திபன்சொல்
கேளாக்கடல்புக்கசேயினைமீட்டதங்கேதமுடன்
மாளாப்பதம்புக்கமைந்தனைமீட்டதுமாறலவே
மீளாப்பதம்புக்கபாலனாயென்றுமீட்டதற்கே. (எஉ)

பொருக்கேதனப்படைமன்னவாமாய்த்துப்புவிமடந்தை
பெருங்கேதநீக்கிக்கடந்ததுமீளப்பிறங்குபுள்ளின்
வருங்கேசவன்சக்ரமாயோனரங்கன்வரவிடுத்த
கருங்கேசமொன்றுதன்னிச்சையிலேசெய்தகாரியமே. (எங)

அராவணையிற்றுயிறென்னரங்காமறையாயும்வண்ணம்
பராசரன்மாமகனுரியசீபண்டுபாரதப்போர்
பொராவிழுநூற்றுவர்சேனையெல்லாம்புனற்கங்கைவெள்ளத்
தராதலமேல்வரக்காட்டியவாதந்தைசந்திக்கவே. (எச)

தருமந்தவிர்ந்துபொறைகெட்டுச்சத்தியஞ்சாய்ந்துதயை
தெருமந்துதன்பூசனைமுழுதுஞ்சிதையக்கலியே
பொருமந்தகாலக்கடையினிலெம்பொன்னரங்கனல்லால்
அருமந்தகற்கியென்றுரேயவைகிலையாக்குவரே. (எரு)

தென்னும்புனற்பொன்னிநன்னீரரங்கர்சிலாகிக்குமா
றென்னுங்கரத்துறையெண்ணெயும்போலெண்ணில்கோடியண்டத் [டத்
துன்னும்புறம்புமொழியாதநின்றுமுகங்கடொறும்
கொள்ளுந்திருவுருவெல்லாமவரதிகோலங்களே. (எசா)

உம்பர்க்கரியபெருமாளரங்கர்தம்முன்மையெல்லாம்
இம்பர்க்குலகில்வெளியிட்டவேசரணில்லையென்றோர்
கும்பக்கடகயக்கூப்பிடச்செல்றதுங்கோளரியாய்த்
தம்பத்துதித்ததுந்தாழிக்குவீட்டினைத்தந்ததுமே. (எஎ)

பொங்கரவென்பதுமெல்லணையூர்திவெம்புள்ளரசு
பங்கயமின்றெடுபார்மகடேவிபடைப்பவன்சேய்
இங்கரர்விண்ணவர்சாதகனடிறைகேழலொன்றாய்
அங்கணெடும்புவியெல்லாமிடந்தவரங்கருக்கே. (எஅ)

சிங்காதனம்பொற்கிரிதிருமஞ்சனந்தெய்வவிண்ணீர்
கொங்கார்தொடையுடுத்தாமஞ்சுடருடைக்கோள்விளக்கம்
பொங்காழிமன்றிருப்போனகமாக்கினர்புண்டரிகை
தங்காதலர்நம்பெருமாளரங்கர்தமக்குமுன்னே. (எகூ)

தேமாமலர்க்கயஞ்சூழ்கோயின்மேவுந்திருவரங்கர்
தாமாதரித்ததிருத்தேவிமாரிற்றரங்கவுடைப்
பூமாதுநாளும்புரத்தேசுமந்துபுரக்குமலர்
மாமாதுசெல்வங்கொடுத்தேயுயிர்களைவாழ்விக்குமே. (அ0)

நம்பெருமாளெழுத்தெட்டின்பெருமைநவிலுமதோ
சம்பரன்மாயப்புரோகிதர்சூழ்வினைதாரணிவாள்
வெம்படைமாசுணமாமதவேழம்விடர்தழல்கால்
அம்பரமேமுதலானவைபாலனுக்கஞ்சினவே. (அக)

அத்தாவரங்கத்தமர்ந்தவனேயெழுத்தாறிரண்டின்
வித்தாயநின்னருள்கொண்டல்லவோவினைவொன்றறியா
உத்தானபாதன்மகன்சலியாதுலகுள்ளளவும்
எத்தாரகைக்குமுனிவர்க்குமேற்சென்றிருக்கின்றதே. (அஉ)

புடைக்குங்குடமுலைப்பூமகளார்தம்பொருட்டுமுந்நீர்
அடைக்கும்பெரியபெருமாளரங்கரவர்கரத்துப்
படைக்குங்கமலமளிக்குமின்னுழிப்படைபடைக்கும்
துடைக்குங்கதைமுத்திமாற்றுதநல்குஞ்சுரிசங்கமே. (அ௩)

ஞாலத்திகிரிமுதுநீர்த்திகிரிநடாத்துமிந்தக்
காலத்திகிரிமுதலானயாவுங்கடல்கடைந்த
நீலத்திகிரியனையாரரங்கர்நிறைந்தசெங்கைக்
கோலத்திகிரிதலைநாளினிற்கொண்டகோலங்களே. (அச)

மோதித்திரைதவழ்நன்னீரரங்கர்முடிமுதலாம்
சாதிக்கதிர்மணிப்பேரணியாகத்தனஞ்சயன்போர்
பேதித்திரவுபகலாகவிண்ணிற்பிறழ்ந்துசெங்கேழ்
சோதித்திகிரித்திருமேனியெங்குஞ்சுடர்விடுமே. (அரு)

ஓலாழிசூழ்புவியுச்சியிலேந்துமுகக்கடையில்
காலானநற்குணமூர்த்தியைக்காணுமக்காலமெல்லாம்
மேலாவிளங்கும்புவிமீதிலென்றன்விழுத்துணையாம்
மாலாமரங்கமணவாளர்கண்டுயின்மாசுணமே. (அசு)

சென்றாற்குடையாங்கடற்புணையாந்திருத்திவிகையாம்
நின்றாலிருதிருப்பாதுகையாமித்திரைக்கணையாம்
முன்றாமணிவிளக்காம்பூம்படியாம்புனைகோசிகையாம்
அன்றாலிலையிற்றுயிலரங்கேசர்க்கரவரசே. (அஎ)

சிரஞ்சேதனன்விழிதேகஞ்சிறைபின்சிணைபதங்கம்
தரந்தோள்களுருவடிவம்பெயரொசர்சாமமுமாம்
பரந்தேதமதடியார்க்குள்ளபாவங்கள்பாற்றியருள்
சுரந்தேயளிக்குமரங்கர்தம்மூர்திச்சுவணனுக்கே. (அஅ)

ஆளிலமாராங்கேசர்சேவைக்கனுகுந்தொறும்
கோளிற்றிரளைவிலக்கும்பிரம்பின்குணைபடலால்
தோளிலடித்தழும்புண்டச்சுரர்க்கச்சுரர்தொழலால்
தாளின்முடித்தழும்புண்டொஞ்சேனைத்தலைவருக்கே. (அக)

ஆதித்திருவெழுத்தைந்துடைத்தாயுமராவணிந்தும்
சோதித்திருக்கண்கள்மூன்றுடன்றேன்றுஞ்சுருதிசொன்ன
நீதிக்கிசையநடவாமனிதரைநேமிகொண்டு
வாதித்தருளும்பெருமாளரங்கர்தம்வாகனமே. (கூ0)

வல்லாமுலைத்திருவின்பெருமான்விட்டவாகனம்போய்த்
தொல்லாழிநீரைக்கடந்ததுதாளின்சுடரிரண்டும்
செல்லாதவுளைத்திரிபுரங்கண்டதுசேனைவெள்ளம்
எல்லாமுயக்கொண்டதுமருந்தார்கிரியேந்திவந்தே. (கூக)

தொல்லைக்கமடத்தலைவகண்டந்தொடுகடனீர்
எல்லைக்கிரிதனக்கிப்புறத்தெண்கிரியப்புறத்தில்
மல்லைப்பரிதியின்மண்டலநாகமவ்வான்முகட்டேர்
அல்லைப்புறத்துவைகுந்தம்பொற்கோயிலரிக்கிடமே. (கூஉ)

எந்தவுலகத்துமேலதுநித்தியவின்பத்தது
பந்தமசிப்பதுநித்தருமுத்தரும்பாரிப்பது
முந்தமறையினின்றல்லாதெத்தேவர்க்குமுன்னவரி
தந்தமிலதரங்கன்மேவுவைகுந்தமானதுவே. (கூந)

காவுஞ்சுரபியுஞ்சிந்தாமணியுங்கடிக்கமலப்
பூவும்பணிலமும்பொங்கிளமாவும்புகர்த்தடக்கை
மாவும்பிறையுமமுதமுமெங்மன்மதிலரங்கர்
மேவுந்தரங்கக்கடலில்லையாகிலிவ்விண்ணவர்க்கே. (கசு)

அருமறையோதியவோரெட்டெழுத்துமயன்படைத்த
இருநிலமீதினில்யாவருங்காணவில்கருத்திக்
குருமணிநாகத்திலெங்கோன்விழிதுயில்கொண்டருளத்
திருமதிலேழும்விமானமுமாகிச்சிறக்கின்றவே. (கரு)

தாழாதிபஞ்சொல்லவந்தாரரங்கர்தயங்குசெம்பொற்
கேழாவிமானங்கிளர்செம்பொன்மேருகிரிகிசர்த்த
ஏழாவரணத்திடையிடைத்தீவுகளிவ்வனைத்தும்
சூழாறுமாகடலெவ்வாறுநாமினிச்சொல்லுவதே. (கசா)

ஞாலத்திகிரிபகலிரவாகநடத்துமிந்தக்
காலத்திகிரிநடக்கவற்றேவெங்கனலுமிழ்வாய்
ஆலப்பணியணைமீதேயரங்கத்தமர்ந்துறையும்
நீலக்கடல்கண்விழித்துறங்காவிடினிச்சமுமே. (கஎ)

தாமக்கடையுகத்துள்ளேவிழுங்கித்தரித்தபழஞ்
சேமப்புவனஞ்செரிக்குமென்றேசிவன்மாமுடிக்கு
நாமப்புனறந்தபொற்றாளரங்கர்நலஞ்சிறந்த
வாமத்திருக்கரமேலாகவேகண்வளர்வதுவே. (கஅ)

கதிராருநீண்முடிசேர்ந்தகைப்போதெக்கடவுளர்க்கும்
அதிராசனுனமைகாண்மினென்றேசொல்லுமாயபொன்மா
மதிலாரரங்கர்பொற்றாளார்திருக்கரமற்றிதுவே
சதுராननன்முதலெல்லாவுயிர்க்குஞ்சரணென்னுமே. (ககூ)

மோகத்துயில்புரிமெய்போலக்கண்டமுறையினுக்கிங்
கேகத்திருவுருவென்றறிந்தேனிந்நினையையன்போ
டாகத்துவைத்தருடென்னரங்காவங்குமிங்குமொக்கப்
போகத்துக்கொண்டபணநாகமொன்றுபொறுத்தபின்னே. ()

சோதித்திருவுருவாகாயமாகச்சுருதிநன்னூல்
சாதித்துநின்றுதெளிந்துவிட்டேன்மிக்கதானவனைச்
சேதித்தநேமித்திருவரங்காசங்கைதிரவுன்றன்
ஆதித்திருவுருவின்பேரணிநிறமானபின்னே (௧0௧)

ஓங்காரவட்டத்துமாசுணைப்பாயிலுலோகமுண்ட
பூங்கார்விழிக்குப்புலப்பட்டதாலெப்பொழுதுமென்னை
நீங்காதிடர்செய்யுந்தீவினைகாளினிநின்றுநின்று
தேங்காதநீருமக்காளிடத்தேசென்றுசேர்மின்களே. (௧0௨)

விண்ணிட்டசோலையரங்கத்துமேவியமெய்ப்பொருளைக்
கண்ணிட்டபார்வையிற்கட்டியென்கண்வரக்கண்டுடலாம்
புண்ணிட்டவண்ணக்கிழியுட்பொதிர்துபுறத்துவெள்ளை
மண்ணிட்டிலச்சினையிட்டுவிள்ளாதுள்ளம்வைத்தனனே. (௧0௩)

கைத்துப்பழவினைதித்திக்கவென்றன்கருத்தினுள்ளே
பைத்துத்திமெத்தையின்மீதேதுயிலும்பைங்கேழெறிந்து
மைத்துக்குளிர்ந்துமதரித்துமெத்தென்றுமாமணத்து
நெய்த்துப்புகர்த்துநிகர்க்கும்பொன்மேனிநெடுங்கடலே. (௧0௪)

தெள்ளாவரும்பொன்னிசூழரங்காவொருதேவனையும் [ப்
உள்ளாதெனதுள்ளும்யானென்செய்வேன்விண்ணிலோருவனை
புள்ளாகிவேதப்பொருளாகியுன்னைத்தன்பொற்கழுத்தில்
கொள்ளாவருகின்றகோலமுள்ளேகண்டுகொண்டபின்னே. ()

முன்பாலிலைமகவாகியபோதிந்தமூதண்டங்கள்
உன்பாலொடுங்கியிருந்ததுபோலுமுததிமங்கைக்
கன்பாவரங்கத்தென்னாரமுதேயணுவாயிருந்தும்
என்பாலகண்டமுமாகியநீவந்திருக்கின்றதே. (௧0௬)

வலைப்பால்விடம்பிணைக்கண்ணியர்போகத்தின்மாலுறுமென்
தலைப்பாற்கழலருடாரரங்காபலதாயர்தந்த
முலைப்பாற்கடலுன்றிருக்கழலாணிவெண்முத்தெறியும்
அலைப்பாற்கடலினளவாமெனின்மற்றதுவுமன்றே. (௧0௭

தொடைமாறனுந்தமிழ்சொன்மாறனுந்தொழத்துத்திவெள்ளைக்
குடைமாசுணத்திற்றுயிலரங்கேசகுலவுவைவேல்
சடைமாறுகொண்டமைக்கண்ணியர்பால்வைத்தபாசநெஞ்சை
மடைமாறியுன்றன்றிருவடிக்கேவரவைத்தருளே. (க0அ)

கரணந்தவிர்ந்துவிழிபோய்ச்சுழன்றுகலங்குமென்றன்
மரணந்தனில்வந்துதவுகண்டாய்கொற்றவாளியொன்றால்
அரணங்கடந்தவன்காணுவரங்கவென்னுருயிர்க்குன்
ரணஞ்சரணமொழிந்தில்லேவேறித்தராதலத்தே. (க0கூ)

நீடுந்திகிரிப்படையாயுனைக்கற்றுமின்னையென்றும்
பாடும்படித்தமிழ்ப்பாடறந்தாய்பழநான்மறைநூல்
தேடுந்திருவரங்காவடியேனுயிர்செல்லுமந்நாள்
வீடுந்தரவிருந்தாயெனக்கேதினிவேண்டுவதே. (கக0)

ஆவைக்கல்லாவையெதிரொன்றுசொல்லியமுக்கடைந்த
நாவைப்பரிசுத்தம்பண்ணியவேகஞ்சகஞ்சன்விட்ட
கோவைச்சகட்டைப்பகட்டைபொருந்தியகோயிலில்வாழ்
தேவைப்பகர்ந்தசெஞ்சொற்றிருநாமங்கள்சிற்சிலவே. (ககக)

மனிதக்கவிமொழியாமங்கைவாழ்மணவாளவள்ளல்
புனிதக்கவிகொண்டுமாலேசெய்தான்புயல்போன்முழங்கும்
தொனிதக்கசங்கந்திருச்சக்கரஞ்சுடர்வாண்முசலம்
குனிதக்கசார்ங்கந்தரித்தாரரங்கர்பொற்கோயிலுக்கே. (ககஉ)

திருவரங்கத்துமாலே

முற்றிற்று.